**இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

**மட்டம் 03 பரீட்சை - 2026 யூலை**

## (3802) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியும்

**கண்ணோட்டம்:**

இவ்வினாத்தாள் 100 புள்ளிகளை உள்ளடக்கிய **மூன்று பகுதிகளைக்** கொண்டுள்ளது.

1. **பகுதி A** ஆனது **20 புள்ளிகளுக்காக** நான்கு (1 - 4) கட்டாய வினாக்களைக் கொண்டுள்ளது.
2. **பகுதி B** ஆனது **30 புள்ளிகளுக்காக** மூன்று (5 - 7) கட்டாய வினாக்களைக் கொண்டுள்ளது.
3. **பகுதி C** ஆனது **50 புள்ளிகளுக்காக** மூன்று (8 - 10) கட்டாய வினாக்களைக் கொண்டுள்ளது.

### பகுதி A

**வினா இல. 01**

இவ்வினாவானது **(a)** இலாப - நட்டமற்ற புள்ளி (BEP) - அலகுகளில் மற்றும் **(b)** பாதுகாப்பு எல்லை (MOS) - அலகுகளில், ஆகியவற்றைக் கணிக்குமாறு கேட்டிருந்தது.

**பொதுவான தவறுகள் பின்வருமாறு:**

(1) சில பரீட்சார்த்திகள் மொத்த மாறும் கிரயத்தைக் கணிப்பதற்கு மாறும் மேந்தலைகளை எடுத்திருக்கவில்லை.

(2) பாதுகாப்பு எல்லையைக் கணிக்கும்போது, கழிப்பதற்குப் பதிலாக, பாதிடப்பட்ட விற்பனைகள் BEP இனால் வகுக்கப்பட்டன.

**பரீட்சகரின் பரிந்துரை:**

பரீட்சார்த்திகள் இந்த வகையான வினாக்களில் பயிற்சி பெற வேண்டும் என்பதுடன் BEP இன் கருத்தையும் புரிந்து கொள்வதுடன் பாதுகாப்பு எல்லையைக் கணிப்பிடுவது எவ்வாறு என்பதையும் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

**செயலாற்றுகை:**

திருப்திகரமாக இருந்தது. பரீட்சார்த்திகள் BEP மற்றும் பாதுகாப்பு எல்லை - அலகுகளில், ஆகியவற்றைக் கணிப்பிடுவதற்கு இதே போன்ற வினாக்களில் பயிற்சி பெற வேண்டும். எவ்வாறாயினும் அதிகளவான பரீட்சார்த்திகள் **பகுதி (a)** தொடர்பில் அறிந்திருந்தனர். சில பரீட்சார்த்திகள், பாதுகாப்பு எல்லை என்பது எதனைக் குறிக்கிறது என்பது பற்றி போதிய தெளிவைக் கொண்டிருக்காததால் அவர்கள் பாதுகாப்பு எல்லையைக் கணிப்பிடுவதில் சிரமப்பட்டிருந்தனர்.

**வினா இல. 02**

இவ்வினா 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **டிரேட் லிமிட்டெட்டின்** தொழிற்படு மூலதனச் சுற்றுக்காலத்தைக் கணிப்பிடுமாறு கேட்டிருந்தது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள்:**

(1) WCC ஐக் கணிப்பிடும்போது வியாபார சென்மதிப் புரள்வு நாட்களை தொக்கு இருப்பு நாட்கள் மற்றும் வியாபார வருமதி சேகரிப்பு நாட்களுடன் சேர்த்திருந்தனர்.

(2) வியாபாரக் கடன்கொடுத்தோர் காலம் மற்றும் வியாபாரக் கடன்பட்டோர் காலம் ஆகியவற்றைக் கணிப்பிடும்போது, கடன்கொடுத்தோர், கடன்பட்டோர் சராசரிகளைப் பெற மறந்திருந்தனர்.

(3) வினாவானது 65% ஆன விற்பனைகள் மாத்திரமே கடனடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெளிவாகக் குறிப்பிட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் கடன் விற்பனைகளுக்குப் பதிலாக மொத்த விற்பனைகளைப் பயன்படுத்தி வருமதிகள் சேகரிப்புக் காலத்தைக் கணிப்பிட்டிருந்தனர்.

(4) கொள்வனவைக் கணிப்பிடும்போது, சில பரீட்சார்த்திகள் விற்பனைக் கிரயத்துடன் ஆரம்ப இருப்பைக் கூட்டி, இறுதி இருப்பைக் கழித்திருந்தனர். இது மறுதலையாகக் செய்யப்பட வேண்டியதாகும்.

(5) ஆரம்ப மற்றும் இறுதி இருப்பு ஆகியன சராசரியைப் பெறுவதற்குச் சரியாகப் பயன்படுத்தப்பட்ட போதிலும், சராசரி இருப்பைப் பெற்றுக்கொள்ள மறந்திருந்தனர்.

(6) தொழிற்படு மூலதனச் சுற்றுக்காலத்தைக் கணிப்பிடும்போது, சில மாணவர்கள் ஆதரவளிக்கும் கணிப்பீடுகளின்றி விடையை மாத்திரம் நாட்களில் குறிப்பிட்டிருந்தனர்.

(7) சிலர் நாட்களுக்கு மாற்றுவதற்கு 365 ஆல் பெருக்க மறந்திருந்தனர்.

(8) சில பரீட்சார்த்திகள் கணிப்பீடுகளைச் செய்த பின்னர், தொழிற்படு மூலதனச் சுற்றுக்காலச் சூத்திரத்தை பிரயோகிக்க மறந்திருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

பரீட்சார்த்திகள் இதே வகையான வினாக்களில் பயிற்சி பெற வேண்டும் என்பதுடன், தொழிற்படு மூலதனச் சுற்றுக்காலம் என்பதன் கருத்தையும் அதனைக் கணிப்பிடுவதற்கான முறையையும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

**செயலாற்றுகை:**

திருப்திகரமாக இருந்தது.

## வினா இல. 03

இந்த வினாவானது தன்னியக்கத்தின் பயன்பாடு மற்றும் பாதிடல் செயன்முறையிலுள்ள பகுப்பாய்வுக் கருவிகள் பற்றிய பரீட்சார்த்திகளின் புரிதலைப் பரீட்சித்தது. இங்கு பரீட்சார்த்திகள் தன்னியக்கத்தின் நன்மைகளை அடையாளங் காண்பதும், பாதீட்டுச் செயன்முறையை மேம்படுத்துவதற்கு பகுப்பாய்வுக் கருவிகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை விபரிக்குமாறும் கேட்கப்பட்டிருந்தது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள்:**

(1) **பகுதி (b)** இற்கு, பெரும்பாலான பரீட்சார்த்திகள் பொதுவான மற்றும் பொருத்தமற்ற விடைகளை அளித்திருந்தனர். முன்கணிப்பு, போக்குப் பகுப்பாய்வு, முரண் பகுப்பாய்வு, அல்லது சூழ்நிலை மாதிரியாக்கம் போன்ற நடவடிக்கைகள் ஊடாக பகுப்பாய்வுக் கருவிகள் எவ்வாறு பாதிடலை மேம்படுத்துகிறது என்பதைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக, பல பரீட்சார்த்திகள் தொழினுட்பம் அல்லது கணினி முறைமைகளின் பொதுவான அனுகூலங்களை, அவற்றை பாதிடல் செயன்முறையுடன் குறிப்பாகத் தொடர்புபடுத்தாமல் வழங்கினர்.

(2) சில பரீட்சார்த்திகள் ஒரே விடயத்தை பல்வேறு சொற்பதங்களில் மீண்டும் மீண்டும் எழுதி, பகுப்பாய்வுக் கருவிகள் பாதிடல் செயன்முறைக்கு ஆதரவளிக்கும் மூன்று தனித்துவமான வழிகளை வழங்கத் தவறியிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- விடையளிப்பதற்கு முன்னர் வினாவில் பயன்படுத்தப்பட்டுள்ள வினைச் சொல் மற்றும் குறிப்பான தேவைப்பாடு ஆகியவற்றில் கூடிய கவனம் செலுத்தவும்.
- பாதிடலிலுள்ள பகுப்பாய்வுக் கருவிகள் மற்றும் தன்னியக்கத்தின் பிரயோகம் பற்றிப் படிப்பதுடன் அவை நிறுவனத்தின் திட்டமிடல், எதிர்வுகூறல், கண்காணித்தல் மற்றும் தீர்மானமெடுத்தலில் எவ்வாறு உதவுகின்றன என்பது பற்றியும் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

**செயலாற்றுகை:**

மோசமான செயலாற்றுகை. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளால் தன்னியக்கத்தின் குறிப்பான பயன்பாடுகள் மற்றும் பாதிடல் செயன்முறையிலுள்ள பகுப்பாய்வுக் கருவிகள் போன்றவற்றைச் சரியாக அடையாளங்காண முடியவில்லை.

## வினா இல. 04

இவ்வினா, தொடர்புடைய மற்றும் தொடர்பற்ற கிரயங்களை அடையாளங்கண்டு, செயற்றிட்டத்தின் ஒட்டுமொத்த நிதிசார் தாக்கத்தைக் கணிப்பிடுவதன் மூலம் **வரையறுக்கப்பட்ட X கம்பனிச்** செயற்றிட்டத்திற்கு விலைமனுச் செய்ய வேண்டுமா என்பதை மதிப்பிடுமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது.

அதிகமான பரீட்சார்த்திகளால் பல தொடர்புடைய கிரயங்களை அடையாளங்காண முடிந்திருந்ததுடன் அவர்களின் பரிந்துரைகளை ஆதரிக்கத் தேவையான கணிப்பீடுகளையும் செய்திருந்தனர்.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள்**:

(1) சில பரீட்சார்த்திகள் ஒவ்வொரு கிரயமும் தொடர்புடையதா, இல்லையா என்பதை எழுதியிருக்கவில்லை.

(2) சில பரீட்சார்த்திகள், தற்போது இருப்பில் வைத்திருக்கப்படும் பொருள்களை ஒடிவுப் பொருளாக அப்புறப்படுத்துவதன் மூலம் ஒரு மாற்றுப் பயன்பாடு உள்ளது என்பதையும் அதனால் அவை ஒரு சந்தர்ப்பக் கிரயத்தைக் கொண்டுள்ளது என்பதையும் உணரத் தவறியிருந்தனர்.

(3) பல பரீட்சார்த்திகள் திறமையான மற்றும் திறமையற்ற கூலிகள் தொடர்பில் வெவ்வேறு சூழ்நிலைகளைக் கருத்திற்கொள்ளாமல் அனைத்து கூலிக் கிரயங்களையும் தொடர்புடையதாகக் கருதினர்.

(4) ஒரு சில பரீட்சார்த்திகள் ஒரு விவரிப்பு கலந்தாய்வை மாத்திரமே வழங்கினர், **வரையறுக்கப்பட்ட X கம்பனி,** செயற்றிட்டத்திற்கு விலைமனுச் செய்ய வேண்டுமா என்பதை மதிப்பிடத் தேவையான தொடர்புடைய கிரயக் கணிப்பீடுகளை முன்வைக்கத் தவறியிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

(1) தொடர்புடைய கிரயவியல் கோட்பாடுகள், குறிப்பாக சந்தர்ப்பக் கிரயங்கள், ஆழ்ந்த கிரயங்கள் போன்றவை பற்றிய ஒரு தெளிவான புரிதலை விருத்தி செய்யுங்கள்.

(2) எந்தவொரு கணிப்பீட்டையும் செய்வதற்கு முன்னர், ஒவ்வொரு கிரயமும் தொடர்புடைய கிரயமா அல்லது தொடர்பற்ற கிரயமா என்பதைக் கவனமாக அடையாளங் காணுங்கள்.

(3) விவரிப்பு விடைகளை மாத்திரம் வழங்குவதைவிட நன்கு கட்டமைக்கப்பட்ட கணிப்பீடுகளுடன் நிறைவுரையை ஆதரியுங்கள்.

(4) கடந்தகால பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் சுயகற்றல் பொருள்களிலிருந்து தொடர்புடைய கிரயவியல் வினாக்களில் அதிகம் பயிற்சி செய்யுங்கள்.

**செயலாற்றுகை:**

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.

## <u>பகுதி B</u>

### வினா இல. 05

இந்த வினா பின்வருவனவற்றைப் பரீட்சித்திருந்தது:

- சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம்
- மீட்கப்படமுடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம்
- மீட்கத்தக்க தனிச்சங்களின் கிரயம்
- சந்தைப் பெறுமதிகளைப் பயன்படுத்தி, எடையேற்றிய சராசரி மூலதனக் கிரயம் (WACC). ஆகியவற்றைக் கணிப்பிடுதல்.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள்:**

(1) அதிகமான பரீட்சார்த்திகள் சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம் மற்றும் மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் ஆகியவற்றைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் பங்கிலாப வளர்ச்சி வினாவில் இல்லாதபோதும், சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயத்தைக் கணிப்பிடும்போது பங்கிலாப வளர்ச்சி மாதிரிச் சூத்திரத்தை தவறாக அடையாளங் கண்டிருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகள் தனிச்சங்களின் கிரயத்தைக் கணிப்பிடும்போது தொடர்புடைய காசு உட்பாய்வுகள் மற்றும் வெளிப்பாய்வுகளை அடையாளங் காணவில்லை. அவர்கள் உட்பாய்வுகளை வெளிப்பாய்வுகளுடனும் வெளிப்பாய்வுகளை உட்பாய்வுகளுடனும் கலந்து எழுதியிருந்தனர். அத்துடன், அவர்கள் மீட்கத்தக்க தனிச்சங்களின் வழங்கல் ஆண்டை தவறாக விளங்கியிருந்தனர். இதனால், மீட்பு ஆண்டு தவறாகக் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது.

(4) IRR சூத்திரத்தைக் குறிப்பிடுவதிலும் பிரயோகிப்பதிலும் குறிப்பாக மறைப் பெறுமானங்களை கவனத்திற் கொள்வது குறித்த வழுக்கள் அடிக்கடி காணப்பட்டன.

(5) சிலர் சந்தைப் பெறுமதிக்குப் பதிலாக புத்தகப் பெறுமதியைப் பயன்படுத்தி WACC ஐக் கணிப்பிட்டிருந்தனர். வினாவானது சந்தைப் பெறுமதிகள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என்பதை தெளிவாகக் குறிப்பிட்டிருந்தது.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

(1) வினாவைக் கவனமாக வாசித்து, வினாவில் தரப்பட்ட அறிவுறுத்தல்களை மாத்திரம் பிரயோகிக்கவும்.

(2) IRR ஐக் கணிப்பிடும்போது, மாணவர்கள் தாங்கள் சரியான சூத்திரத்தைக் குறிப்பிடுகிறார்களா என்பதையும் பொருத்தமான பெறுமானங்களைப் பிரயோகிக்கிறார்களா என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். திருத்தக் காரணியைக் கணிப்பிடுகையில், மறைப் பெறுமானங்களைக் கவனத்திற் கொள்ளும்போது குறிப்பான கவனத்தைச் செலுத்துங்கள்.

(3) வினாவில் வேறு வகையில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி, WACC கணிப்பீடுகள் சாதாரணமாகவே புத்தகப் பெறுமதியைக் காட்டிலும் சந்தைப் பெறுமதியின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை மாணவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

(4) மாணவர்கள் பல்வேறுபட்ட கடந்தகால பரீட்சை வினாத்தாள்களில் பயிற்சி செய்யவும் சூத்திரங்களைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, அவற்றைச் சரியாகப் பிரயோகிப்பதை விருத்தி செய்யவும் ஊக்குவிக்கப்படுகின்றனர். வினாவைக் கவனமாக வாசித்து, கணிப்பீட்டுப் படிமுறைகளில் கவனஞ் செலுத்துவது பொதுவான வழுக்களைக் குறைக்க உதவும்.

**செயலாற்றுகை:**

ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது. அதிகமான பரீட்சார்த்திகள் சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம் மற்றும் மீட்கப்படமுடியாத முன்னுரிமைப் பங்குகள் ஆகியவற்றை வெற்றிகரமாகக் கணிப்பிட்டிருந்த அதேவேளை, பலர் இறுதி மட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட IRR கணிப்பீட்டில் சிக்கியிருந்தனர்.

## வினா இல. 06

இவ்வினாவானது 2026 யூலை, ஆகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களுக்கான காசுப் பாதீட்டைத் தயாரிப்பது பற்றிப் பரீட்சித்திருந்தது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள்:**

(1) சில பரீட்சார்த்திகள் இறுதிக் காசு மீதியைக் காட்டியிருக்கவில்லை.

(2) அதிகமான பரீட்சார்த்திகள் சரியான வட்டி வீதங்களை (ஆண்டிற்கு 4% மற்றும் 20%) அடையாளங் கண்டிருந்த அதேவேளை உரிய மாதங்களுக்கான மாதாந்த வட்டி வருமானத்தைக் காட்டுவதற்கு அவற்றைப் 12 ஆல் பிரிப்பதற்குத் தவறியிருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகள் செய்முறைகளில் காசுப் பாய்வைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர், ஆயினும் அதனை காசுப் பாய்வுக் கூற்றுக்கு எடுத்திருக்கவில்லை.

(4) பெரும்பாலான பரீட்சார்த்திகள் உரிய மாதங்களின் நேர் கூலி மற்றும் மூலப் பொருள்களுக்கான கொடுப்பனவை அடையாளங்காணத் தவறியிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

(1) கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.

(2) வினாவை மிகக் கவனமாக வாசித்து, தேவைப்பாட்டைப் புரிந்து கொள்ளுங்கள்.

(3) மாணவர்கள் குறிப்பாக கடன் விற்பனைகள், காசு விற்பனைகள் மற்றும் கொடுப்பனவு விதிமுறைகள் தொடர்பில் வினாவில் குறிப்பிடப்பட்ட பரிவர்த்தனைகளின் காலத்தைக் கவனமாகப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

**செயலாற்றுகை:**

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை.

## வினா இல. 07

இவ்வினா பின்வருவனவற்றைப் பரீட்சித்திருந்தது:

- தரப்பட்ட வளக் கிடைப்பனவிலிருந்து வரையறைக் காரணி/காரணிகளை அடையாளங்காணல்.
- அடையாளங் காணப்பட்ட வரையறைக் காரணியின் அடிப்படையில் உகந்த உற்பத்திக் கலவையைக் கணிப்பிடல்.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள்:**

(1) சரியான மிகை/பற்றாக்குறை வளங்களின் அளவைச் சரியாக அடையாளங் கண்டிருந்த சில பரீட்சார்த்திகள், இறுதித் தீர்மானத்தை தவறாக எழுதியிருந்தனர். உதாரணமாக, **பொருள் X1** இன் சரியான மிகை அளவானது பற்றாக்குறை என எழுதப்பட்டிருந்தது. இதனால் அந்தத் தீர்மானத்திற்கான புள்ளி இழக்கப்பட்டிருந்தது.

(2) சில பரீட்சார்த்திகள் வரையறைக் காரணிக்கான ஒரு kg இற்கான பங்களிப்பைக் கணிப்பிடும்போது, அலகொன்றிற்கான பங்களிப்பை அலகொன்றிற்கான kg இன் எண்ணிக்கையால் தவறாகப் பெருக்கியிருந்தனர்.

(3) எவ்வாறாயினும், வரையறைக் காரணிக்கான கணிப்பிடப்பட்ட பங்களிப்பின் அடிப்படையில் தரமிடல் சரியாகச் செய்யப்பட்டிருந்தது.

(4) சிலர் உகந்த உற்பத்திக் கலவையைக் குறிப்பிட்டிருக்கவில்லை.

(5) சில பரீட்சார்த்திகள் ஓர் அலகிற்கான பங்களிப்பைக் கணிப்பிட்டு, பங்களிப்பின் அடிப்படையில் மாத்திரம் வெறுமனே தரப்படுத்தியிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்**:

ஓர் அலகிற்கான பங்களிப்பு, வரையறைக் காரணியின் பங்களிப்பு ஆகியவற்றைக் எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றியும் அடையாளங் காணப்படும் வரையறைக் காரணியின் அடிப்படையில், உகந்த உற்பத்திக் கலவையை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றியும் கண்டறிய கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி செய்யுங்கள்.

**செயலாற்றுகை:**

ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானது. அதிகமான பரீட்சார்த்திகள் பாதிடப்பட்ட விற்பனைத் தேவைகளுக்கு எதிராக கிடைப்பனவு வளங்களை ஒப்பீடு செய்ததன் மூலம் வரையறைக் காரணிகளைச் சரியாக அடையாளங் கண்டிருந்தனர்.

## பகுதி C

### வினா இல. 08

இவ்வினாவானது சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றையும் **செயன்முறை 1** கணக்கையும் தயாரிக்குமாறு கேட்டிருந்தது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள்:**

(1) சில பரீட்சார்த்திகள் வினாவில் தரப்பட்டிருந்த பெறுமானங்களைக் கொண்டு, செயன்முறைக் கணக்கையும் சமான அலகுகள் கூற்றையும் தயாரித்திருந்தனர். ஆனால் மேலதிக கணிப்பீடுகளைத் தொடரவில்லை.

(2) சமான அலகுகள் கூற்றைத் தயாரிப்பதற்கான கணிப்பீட்டின்போது பரீட்சார்த்திகள் ஆரம்ப புத்துருவாகும் வேலையை - அலகுகளில் காட்டியிருந்தனர்.

(3) சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றைப் பெறும்போது சாதாரண நட்டத்தின் ஒடிவுப் பெறுமதி கழிக்கப்படவில்லை அல்லது அது பொருள், கூலி மற்றும் மேந்தலைகள் ஆகிய மூன்று கிரயக் கணிப்பீடுகளிலிருந்தும் கழிக்கப்பட்டிருந்தது.

(4) சில பரீட்சார்த்திகள் சமான அலகுகளைக் கணிப்பிடும்போது சாதாரண நட்டத்தைச் சீராக்கியிருந்தனர்.

(5) உரிய அலகுகளுக்குச் சமானமான மொத்தக் கிரயத்தை அடையாளங் காணும்போது, ஆரம்ப புத்துருவாகும் வேலையின் பெறுமதி கணிப்பீட்டிற்கு எடுக்கப்படவில்லை.

(6) சில பரீட்சார்த்திகள் பெறுமதிகள் மற்றும் அளவுகளைக் காட்டி செயன்முறை 1 கணக்கைத் தயாரிக்கத் தவறியிருந்தனர். அவர்கள் பெறுமதியையோ அல்லது அளவுகளையோ மாத்திரம் பயன்படுத்தியிருந்தனர்.

(7) செயன்முறை 1 கணக்கின் பெறுமதி தொடர்பான செய்முறைகள்; அசாதாரண நட்டம் காட்டப்படவில்லை.

(8) செயன்முறைக் கணக்கு மற்றும், கிரயம் மற்றும் சமான அலகுகளைக் காட்டும் கூற்று ஆகியவற்றுக்கான சரியான வடிவம் சில பரீட்சார்த்திகளால் பிரயோகிக்கப்படவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

(1) பரீட்சார்த்திகள் இதேமாதிரியான வினாக்களில் பயிற்சி செய்தல் வேண்டும்.

(2) சுய கற்றல் புத்தகத்திலுள்ள சம்பந்தப்பட்ட அத்தியாயங்களை முறையாக வாசிக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.

**செயலாற்றுகை:**

செயலாற்றுகை திருப்திகரமானது. பரீட்சார்த்திகள் செயன்முறை 1 கணக்கைத் தயாரித்து புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றைத் தயாரிப்பது குறித்தான அறிவு போதுமானதாக இருக்கவில்லை. குறிப்பாக அசாதாரண நட்டத்திற்கான சமான அலகுகளைக் கணிப்பிடுவது பற்றிய அறிவு மிகக் குறைவாகவே காணப்பட்டது.

## வினா இல. 09

இவ்வினா, பொருளொன்றை உற்பத்தி செய்வதற்கான ஒரு புதிய செயற்றிட்டத்தில் முதலீடு செய்வது தொடர்பான மதிப்பீட்டைப் பரீட்சித்திருந்தது. இங்கு வரிச் சீராக்கங்களுடன் NPV ஐக் கணிப்பிட்டு, முதலீட்டுத் தீர்மானத்தை மதிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதாவது முதலீடு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமா, இல்லையா என்பது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள்:**

(1) பெரும்பாலான பரீட்சார்த்திகள் வருமான வரிக் கொடுப்பனவை தவறாகக் கணிப்பிட்டிருந்தனர். தேய்மானம் மற்றும் மூலதன விடுதொகைச் சீராக்கங்களைப் பயன்படுத்தி வரியைக் கணிப்பிடுவதில் குறைவான புரிதலே காணப்பட்டதை இது வெளிக்காட்டுகிறது.

(2) வினாவில் கழிவு வீதமானது 15% எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் வெவ்வேறு கழிவு வீதத்தை (மூலதனக் கிரயம்) பயன்படுத்தியிருந்தனர்.

(3) பல பரீட்சார்த்திகளின் விடைகளில் பல்வேறு கணிப்பீட்டு வழுக்கள் அவதானிக்கப்பட்டன. குறிப்பாக, பணவீக்கத்திற்கான சீராக்கமானது கிரயம் மற்றும் வருமானத்திற்காக சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

(4) சில பரீட்சார்த்திகள் ஆண்டு 0 இற்குப் பதிலாக ஆண்டு 1 இல் அறிமுகக் கிரயத்தைப் பிழையாகப் பதிவு செய்திருந்தனர்.

(5) ஒரு சில பரீட்சார்த்திகள் நிகர இற்றைப் பெறுமதியை (NPV) கணிப்பிடாது, அவர்களுடைய தீர்மானத்தை முன்வைத்திருந்தனர்.

(6) மூலதன விடுதொகைகள், செயற்றிட்ட மதிப்பீட்டின் காசுப் பாய்வினது ஒரு பகுதியல்ல; எவ்வாறாயினும், பல பரீட்சார்த்திகள் பிழையாக அவற்றை செயற்றிட்ட மதிப்பீட்டில் உள்ளடக்கியிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

(1) கடந்தகால வினாத்தாள்களிலிருந்து இவ்வகையான வினாக்களில் பயிற்சி செய்யவும்.

(2) கழிவீட்டு நோக்கங்களுக்காக வினாவில் தரப்பட்ட மூலதனக் கிரயத்தை (கழிவுக் காரணி) பயன்படுத்தவும்.

(3) கணக்கீட்டு இலாபத்திற்கும் வரிவிதி இலாபத்திற்கும் இடையேயான வேறுபாட்டை புரிந்துகொள்ள வேண்டும்.

(4) கணிப்பீட்டு வழுக்களைக் குறைக்கவும்.

(5) காசு உட்பாய்வுகள் மற்றும் வெளிப்பாய்வுகள் பற்றிப் புரிந்துகொண்டு, முன்மொழியப்பட்ட முதலீட்டுச் செயற்றிட்டத்தின் தொடர்புடைய காசு உட்பாய்வுகள் மற்றும் வெளிப்பாய்வுகளை சரியாக அடையாளங் காணுங்கள்.

**செயலாற்றுகை:**

இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.

**வினா இல. 10**

**(A)**

இவ்வினாவின் **பகுதி (a)** ஆனது, முரண் பகுப்பாய்வு பற்றிய அறிவைப் பரீட்சித்தது. இங்கு விற்பனை விலை முரண், நேர் பொருள் விலை முரண், மூலப்பொருள் கலவை முரண் மற்றும் நேர் மூலப்பொருள் விளைவு முரண் போன்றவற்றைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டதுடன்,

**பகுதி (b)** ஆனது, செயற்பாட்டுக் கூற்றைத் தயாரிப்பது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள்:**

(1) பல பரீட்சார்த்திகளுக்கு முரண்களைக் கணிப்பிடும் சூத்திரங்கள் பற்றி அறிவு காணப்படவில்லை.

(2) சூத்திரம் பற்றிச் சரியாக அறிந்திருந்த சில பரீட்சார்த்திகளுக்கு உரிய சூத்திரத்தில் தரவுகளைப் சரியாகப் பிரதியிட முடியவில்லை.

**(3) நேர் மூலப்பொருள் கலவை *எதிர்* விளைவு குழப்பம்:**

- நேர் மூலப்பொருள் கலவை முரணைக் கணிப்பிடும்போது, உண்மையான மொத்த அளவுக்கு நியம விகிதாசாரத்தைப் பிரயோகிப்பதற்குப் பதிலாக உண்மையான அளவுகளைத் தவறாகப் பயன்படுத்தியிருந்தனர்.
- நேர் மூலப்பொருள் விளைவு முரணைக் கணிப்பிடும்போது, நியம அளவுகளுக்குப் பதிலாக உண்மையான அளவுகளைப் பயன்படுத்தி, உண்மையான உற்பத்தி வெளியீட்டிற்கு ஏற்ப நியம அளவுகளை அளவிடத் தவறியிருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகள், கணிப்பிடப்பட்ட முரண் சாதகமானதா அல்லது பாதகமானதா என்பதைக் குறிப்பிடவில்லை.

(5) சிலர் சாதகமானதை பாதகமானது எனவும், பாதகமானதை சாதகமானது எனவும் தவறாக அடையாளங் கண்டிருந்தனர்.

(6) சில மாணவர்கள் கணிப்பீட்டு வழுக்களை எதிர்கொண்டு, தவறான பாதகமான மற்றும் சாதகமான நிபந்தனைகளை முன்வைத்திருந்தனர்.

(7) செயற்பாட்டு அறிக்கைகளைத் தயாரிக்கும்போது, பாதகமான (A) மற்றும் சாதகமான (F) குறிகளைத் தவறாகக் கையாண்டதால் பாதிடப்பட்ட பங்களிப்பை உண்மையான பங்களிப்புடன் கணக்கிணக்கம் செய்வதில் வழுக்கள் ஏற்பட்டன. இதன் விளைவாக, தவறான நிகரக் கிரய முரண் சீராக்கங்கள் ஏற்பட்டன.

**(B) முகாமைத்துவக் கணக்கீட்டில் தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதன் அனுகூலங்கள்:**

(a) அதிகமான பரீட்சார்த்திகள், முகாமைத்துவக் கணக்கீட்டில் தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதன் அனுகூலங்கள் குறித்த கேள்விக்கு சரியாக விடையளித்திருந்தனர்.

(b) இருப்பு முகாமைக்காகக் கிடைக்கக்கூடிய மென்பொருள் தொகுப்புகள் குறித்த கேள்விக்கு மிகச் சில பரீட்சார்த்திகளே சரியாக விடையளித்திருந்தனர். அதிகமான மாணவர்கள் இருப்பு முகாமைக்கெனப் பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படும் தொகுப்புகளைக் காட்டிலும் QuickBooks, Sage, மற்றும் ERP முறைமை போன்ற கணக்கீட்டு மென்பொருள் தொகுப்புகளைப் பட்டியலிட்டிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

(1) கடந்தகால வினாத்தாள்களில் உள்ள இவ்வகையான வினாக்களில் பயிற்சி செய்யவும். எப்பொழுதும் உங்களது செய்முறைகளைக் காட்டவும்.

(2) கற்றல் புத்தகத்தை படிப்பதுடன், செய்முறைப் பிரயோகங்களையும் மேற்கொள்ளவும்.

(3) மாணவர்கள் வெவ்வேறு சூழ்நிலைகள் குறித்தான முரண்களின் சூத்திரங்களில் பயிற்சி செய்யவும்.

(4) முரண் பகுப்பாய்வில் சரியான பிரயோகத்துடன் சூத்திரத்தை முன்வைக்கவும்.

**செயலாற்றுகை:**

வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை. பெரும்பாலான பரீட்சார்த்திகள் நேர் மூலப்பொருள் கலவை முரண் மற்றும் நேர் மூலப்பொருள் விளைவு முரண் ஆகியவற்றைத் தீர்ப்பதற்கு சிரமப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

- * * * -